## மியாட் மருத்துவமனையில்

# ரத்தம் மட்டும் சேகரிக்க புதிய துறை

சென்னை, ஜன. 19: மியாட் மருத்துவமனையில் ₹5 கோடியில் 'ரத்த ஏற்ற மருத்துவ துறை' துவக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மியாட் மருத்துவமனை நிறுவன தலைவர் டாக்டர் மோகன்தாஸ் நேற்று அளித்த பேட்டி: மியாட் மருத்துவமனையில் தானமாக பெறப்படும் ரத்தம் 4 வகையாக தரம் பிரிக்கப்படும்.



ரத்தம் ஏற்றும் துறையை எம்ஆர்எப் மேலாண் இயக்குனரின் மனைவி அம்பிகா மேமன் துவக்கினார். அருகில் டாக்டர் மோகன்தாஸ், மல்லிகா மோகன்தாஸ், மற்றும் டாக்டர் ப்ரித்வி.

தற்போது மியாட் மருத்துவமனையில் 5,500 சதுர அடி பரப்பளவில் ₹5 கோடி செலவில் புதிய இயந்திரங்கள் வசதியுடன் 'ரத்த ஏற்ற மருத்துவ துறை' துவங்கப்பட்டுள்ளது. இங்கு மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு எந்த வகையான ரத்தம் தேவையோ அந்த வகையான ரத்தத்தை மட்டும் தானம் பெறப்படும் நவீன வசதி உள்ளது. ஒரு நோயாளிக்கு ஏற்பட்டுள்ள ரத்த கசிவை தடுக்க, ரத்தத்தை உறைய வைப்பதற்கான பிளேட்லேட் என்ற வகை ரத்தம் போதுமானது. அந்த வகையான ரத்த தானம் கொடுக்க வருபவர்களிடம், இருந்து ஒரு கையின் வழியாக ரத்தத்தை எடுத்து எந்திரத்தில் செலுத்தும்போது பிளேட்லேட் மட்டும் தனியாக பிரித்து எடுக்கப்படும். மற்ற ரத்தம் மீண்டும் இன்னொரு கையில் இணைக்கப்படும் ஊசி வழியாக அவரது உடலுக்கே சென்று விடும். சாதாரணமாக ஆண்டுக்கு 4 முறை ரத்ததானம் செய்யலாம். ஆனால் பிளேட்லேட் ரத்தத்தை மட்டும் தானமாக செய்பவர்கள் ஆண்டுக்கு 20 முறை தானம் செய்யலாம். இவ்வாறு அவர் கூறினார்.

'ரத்த ஏற்ற மருத்துவ துறை'யை எம்ஆர்எப் கம்பெனி இயக்குனர் அம்பிகா மேமன் துவக்கி வைத்தார். மியாட் மருத்துவமனை தலைவர் மல்லிகா மோகன்தாஸ், டாக்டர் ப்ரித்வி மோகன்தாஸ், ரத்த ஏற்ற மருத்துவ துறை தலைவர்கள் டாக்டர் ஜோசப் டேனியல், செழியன் கபாஷ் உடன் இருந்தனர்.